**தலைப்பு 277 - மொனராகலை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 277 – மொனராகலை மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஜூலை 07 ஆந் திகதியன்று மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான செவ்வைபார்த்தலினது நோக்கெல்லையும் அளவும் எனக்குப் கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையரைக்குட்பட்டு இயலுமான அளவில் கணக்காய்வை மேற்கொள்ளக்கூடியவாறு தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்ககூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பராமரித்துச் செல்லல் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மாவட்டச் செயலகத்திற்கென ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 483.32 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டின் இறுதியில் அதில் ரூபா 474.58 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, மாவட்டச் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 1.81 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 8.74 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு.

**2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | நிகர நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு, நிகர நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 429.55 | 429.38 | 0.17 | 0.04 |
| மூலதனம் | 53.77 | 45.20 | 8.57 | 15.94 |
| | | | | 1.81 |
| மொத்தம் | **483.32** | **474.58** | **8.74** | |

**(ஆ) ஏனைய அமைச்சுகளாலும் திணைக்களங்களாலும் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு பணிகளுக்காக ஏனைய 29 அமைச்சுகள் மற்றும் 20 திணைக்களங்கள் என்பவற்றால் ரூபா 1,356.77 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 1,274.25 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ஏற்பாடு செய்யப்பட்ட ஏற்பாடுகளில் 6.08 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 82.43 மில்லியன் சேமிப்புக்குட்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மொனராகலை மாவட்டச் செயலகத்திற்குரிய 27701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் பொருட்டு பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் என்பன கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதி கூடிய வரம்பு | உள்ளவாறானது | அதிகுறைந்த வரம்பு | உள்ளவாறானது | அதி கூடிய வரம்பு | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 36.80 | 25.74 | 28.80 | 30.74 | 125.00 | 92.91 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

மொனராகலை மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 8 பொது வைப்புக் கணக்குகளின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 454.45 மில்லியன் ஆகும். விபரம் வருமாறு.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0060/000 | 0.01 |
| 6000/0000/00/0002/0078/000 | 0.74 |
| 6000/0000/00/0011/0602/000 | 300.00 |
| 6000/0000/00/0013/0070/000 | 21.20 |
| 6000/0000/00/0016/0027/000 | 128.19 |
| 6000/0000/00/0017/0009/000 | 0.09 |
| 6000/0000/00/0018/0038/000 | 4.15 |
| 6000/0000/00/0053/0000/000 | 0.07 |
| | 454.45 |

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

மொனராகலை மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய அவதானிப்புக்களில் போதுமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. போதுமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலளித்தல்**

மீளாய்வாண்டின்போது மாவட்டச் செயலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினா ஒன்றிற்கு 2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாவுடன் தொடர்புடைய கணிப்பிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 3,115,699 ஆகும்.

**3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டினது பயன்பாடு**

**3.2.1 பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து 2015 ஆம் ஆண்டின் போதும் முன்னைய ஆண்டுகளிலும் பெறப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,898,093 பெறுமதியான 53 வகைப் பொருட்களினது 6370 அலகுகள் 10 பிரதேச செயலகங்களில் 2016 மே 31 ஆந் திகதியளவிலும் நலன்பெறுனர்களிக்கிடையே விநியோக்கிக்கப்படாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) அமைச்சினால் மாவட்டச் செயலகத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட செயற்திட்டம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| பிரதேச செயலகம் | நிகழ்ச்சித்திட்டம் / செயற்திட்டம் | பயன்பாடு<br>ரூபா | கணக்காய்வு அவதானிப்பு |
|---|---|---|---|
| படல்கும்புற | 2014 பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நலன்புரிச் சங்கம் ஒன்றிற்கு மின் பிறப்பாக்கி இயந்திரமொன்று வழங்குதல் | 67,500 | கொள்வனவுக் குழுவானது ரூபா 67,500 கொடுப்பனவு செய்து 3*Kw* சுற்றோட்டமுடைய மின் பிறப்பாக்கி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு பெறுகை குழு முடிவு மேற்கொண்டபோதும், அத்தொகைக்கு குறைந்த சுற்றோட்டமுள்ள 2.5*Kw* சுற்றோட்டமுடைய மின் பிறப்பாக்கி இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| புத்தல | 2014 பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சங்க அமைப்புக்களுக்கு பிளாஸ்டிக் நாற்காலிகளை வழங்குதல் | 480,256 | ஒரு பிளாஸ்டிக் நாற்காலி ரூபா 820 வீதம் கொள்வனவு செய்யப்படக்கூடியதாகவிருந்தும், ரூபா 1,024 வீதம் 469 நாற்காலிகள் கொள்வனவு செய்யப்படாமையால் ரூபா 95,676 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| -மேற்படி- | 2014 பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விநியோகிப்பதற்கென 17 தகரத்திலான கூடாரங்களைக் கொள்வனவு செய்தல் | 816,000 | கூறுவிலைகளுக்கான கடிதத்தின் பிரகாரம் 17 தகரத்திலான கூடாரங்கள் 20''X10'' அளவில் ஒவ்வொன்றும் ரூபா 48,000 வீதம் கூறு விலை அனுப்பியிருந்த போதும், அவ்விலைக்கு 20''X8'' அளவிலான கூடாரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| வெல்லவாய | 2014 ஆம் ஆண்டின்போது தெலுல்ல குடியேற்றத் திட்டத்தின் எல் 80 வீதிக்கு கொங்கிரீட் இடும் வேலை | 874,852 | இக் கொங்கிரீட் வீதி ஆங்காங்கே நீளமாகவும் குறுக்காகவும் உடைந்து இருந்தமை 2015 ஒக்டோபர் 22 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டதுடன், கற்கள் வெளியே வந்தமையால் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. |
| வெல்லவாய | 2014 பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் சங்கங்களை அமைப்பதற்காகப் பொருட்களை வழங்குதல் | 770,760 | 462 பிளாஸ்டிக் நாற்காலிகள் மற்றும் 43 உருக்கு அலுமாரிகள் என்பனவற்றைக் கொள்வனவு செய்கையில் தொழில்நுட்பக் குழுவினது பரிந்துரையின்றியும் குறைந்த கூறு விலையைப் புறக்கணித்தும் கூடிய விலைக்குக் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 107,410 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| மடுல்ல | 2014 பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மின் பிறப்பாக்கி இயந்திரம் ஒன்றை மரண உதவிச்சங்கத்திற்கு வழங்குதல் | 67,950 | 1Kw மின் பிறப்பாக்கி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு பணம் வழங்கப்பட்டிருந்தத. எனினும், அத்தொகைக்கு அதே வர்த்தகப்பெயருடைய 0.6Kw மின் உற்பத்தி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |

### 3.3 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) படல்கும்புற பிரதேச செயலகம் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 585,990 கூட்டுத் தொகையையுடைய நிறுத்தி வைத்த பணம் தொடர்பாக 571 ஆம் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஏனைய அமைச்சுக்களாலும் திணைக்களங்களாலும் பல்வேறு பணிகளுக்கென வழங்கிய ரூபா 104,152,020 குறித்த பணிகள் நிறைவேற்றப்படாது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) தானிய உற்பத்திக்கான சுழற்சி நிதியம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு 2014 ஆம் ஆண்டின்போது 6000/0000/00/0011/0602 ஆம் இலக்க வைப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அக் கணக்கு செயற்படாத நிலையிலேயே இருந்தது.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 27701 – கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் தினத்தில் உள்வாறு நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 5,227,946 ஆகும். அந்நிலுவை

மீதிகள் 01 ஆண்டு முதல் 16 ஆண்டுகளாக நிலவி வந்தபோதும், அந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான பின் தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையிலேயே இருந்தன.

### 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

2009 ஜுன் 06 ஆந் திகதிய டீஎம்ஏ/2009 (1) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் குறைந்தது காலாண்டுக்கு ஒரு முறையேனும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். எனினும், மொனராகலை மாவட்டச் செயலகம் 2015 ஆம் ஆண்டில் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத் தொடர்களையே நடாத்தியிருந்தது.

#### 3.5.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

மொனராகலை மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

| | **சொத்து வகை** | **அலகுகளின் எண்ணிக்கை** | **பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் ஆண்டுகள்** |
|---|---|---|---|
| (i) | காணி (ஹெக்டேயர்) | 01 | 6 |
| (ii) | கட்டிடங்கள் | 02 | 2 முதல் 6 வரை |
| (iii) | மோட்டார் வாகனங்கள் | 01 | 10 |
| (iv) | இயந்திர சாதனங்கள் | 02 | 5 முதல் 20 வரை |

**(ஆ) வெளி நபர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

மாவட்டச் செயலாளரின் அங்கீகாரமின்றி புத்தல பிரதேச செயலக வளாகத்தின் ஒரு பகுதி ஒரு தனி நபர் நாற்றுப் பண்ணையாளருக்கு நாற்றுக்களை விற்பனை செய்வதற்கென வழங்கப்பட்டிருந்தது.

### 3.6 இணங்காமை

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களினது ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** |
|---|---|---|
| | **ரூபா** | |
| (அ) பொது நிர்வாகச் சுற்றிக்கை | | |
| (i) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 9/2009 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | - | மெதகம பிரதேச செயலகத்தின் திவிநெகும திணைக்களத்திற்குரிய உத்தியோகத்தர்களது வருகை, வெளியேறல் என்பவற்றைக் குறிப்பிடும் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் “அ” (ii) ஆம் பந்தி | - | மடுல்ல மற்றும் செவனகல பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான 4 வாகனங்கள் 06 மாதங்களுக்கு ஒரு முறை எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திவி நெகும சுற்றறிக்கை | | |
| 2015 ஜுன் 08 ஆந் திகதிய 2015/07 ஆம் இலக்க திவிநெகுமச் சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தி | 1,009,000 | சியம்பலாண்டுவ திவிநெகும அலுவலகத்தால் திவிநெகும சீவனோபாய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொருட்களைக் கொள்வனவு செய்கையில், நலன் பெறுநர்களது பங்களிப்பை அறவிடாது பொருட்களது முழுக் கிரயமும் அரசினால் செலவிடப்பட்டிருந்தது. |
| (இ) அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | | |
| 2001 மார்ச் 28 ஆந் திகதிய 395 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | 300,239 | வருமானச் சான்றிதழ்களை வழங்கும் போது 5 பிரதேச செயலகங்கள் திணைக்களக் கட்டணத்தைக் குறைத்து அறவிட்டிருந்தன. |
| (ஈ) பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் கடிதம் | | |
| 2013 ஜுன் 05 ஆந் திகதிய HAF/03/ADMIN/02/002 ஆம் இலக்கக் கடிதத்தின் 7 ஆம் பந்தி | - | செவனகல மற்றும் படல்கும்புற பிரதேச செயலகப் பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மூன்றில் 3 அத்து மீறிய பறிமுதல்களுக்குரிய உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.7 உள்ளுர் நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்குதல்**

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்டங்களை நிறைவேற்றாது செய்யாது கைவிடுல் மற்றும் செயற்திட்டத் தாமதம் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சில சந்தர்ப்பங்கள் வருமாறு.

**(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுல்**

பிரதேச செயலகங்களால் கீழே குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்க வேண்டிய திகதி | ஆரம்பிக்காததற்கான காரணம், சுருக்கமாக |
|---|---|---|---|
| | ரூபா | | |
| <u>பிபில பிரதேச செயலகம்</u> | | | |
| வன விலங்குகளுக்கு 14 நீர்த்தேக்கங்களை அமைத்தல் | 1,999,974 | 2014.12.05 | நிதியேற்பாடினை கையேற்றமை |

**புத்தல பிரதேச செயலகம்**

| | | | |
|---|---|---|---|
| உனாவடுன கல் பதித்தல் | 490,000 | 2015.10.21 | சீரற்ற காலநிலை |
| குமாரகம பிரிவில் உடைந்திருந்த மதகைச் செப்பனிடல் | 490,000 | 2015.10.20 | சீரற்ற காலநிலை |

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றாது கைவிடுதல்**

மாவட்டச் செயலகம் பின்வரும் செயற்திட்டங்களை ஆரம்பித்திருந்தபோதும், அச் செயற்திட்டங்களை நிறைவேற்றப்படாமல் கைவிட்டிருந்தது.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பித்த திகதி | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | கைவிடுவதற்கான காரணம் |
| --- | --- | --- | --- | --- |
| | ரூபா | | ரூபா | |
| **மெதகம பிரதேச செயலகம்** | | | | |
| வன ஜீவராசிகள் திணைக்கள நிதியேற்பாட்டில் கொட்டபோவ திவுல்தென வீதியில் 03 நீர்க் குழிகளை அமைத்தல் | 4,880,664 | 2014.11.20 | 334,664 | அதிக மழை காரணமாக மூன்று செயற்திட்டங்களது வேலைகளைக் குறித்த சங்கங்கள் நிறைவேற்றத் தவறியமையால் நிதியேற்பாடு மீளப் பெறப்பட்டது. |
| **பிபில பிரதேச செயலகம்** | | | | |
| பம்பரகந்தக்கு அருகே நீர்க்குழிகளை அமைத்தல் | 1,999,974 | 2014.11.18 | 236,800 | குறித்த சங்கம் அதிக மழை காரணமாக வேலையை பூர்த்தி செய்ய தவறியமை |
| நில்கல 14 ஆம் கட்டைக்கு அருகே நீர்த்தேக்கம் அமைத்தல் | 1,999,974 | 2014.12.05 | 255,000 | குறித்த சங்கம் அதிக மழை காரணமாக வேலையை பூர்த்தி செய்ய தவறியமை |
| அலகொலமட கமத்தொழில் வீதியில் மோட்டார் கிறேடர் இடலும் 03 மதகுகளை அமைத்தலும் | 499,814 | 2014.08.01 | 201,200 | அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை |
| புலுபிடிய மஹா வித்தியாலயம் வரையிலான வீதியில் கிறவல் இடல் | 499,814 | 2014.08.01 | 197,200 | அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை |
| **மொனராகலை பிரதேச செயலகம்** | | | | |
| இத்தேகட்டுவ இடது பக்க நீர்ப்பாசனக் | 490,000 | 2015.10.26 | 180,046 | அதிக மழை காரணமாக |

| | | | | |
|---|---|---|---|---|
| குளத்தை புனரமைத்தல் | | | | வேலையை நிறைவேற்ற முடியாமை |
| கொட்டிகல்ஹெல சனசமூக மண்டபத்தின் நிர்மாண வேலை | 490,000 | 2015.10.23 | 115,243 | நிர்மாண வேலையின் போது ஏற்பட்ட அதிக மழை காரணமாக |
| மொனரகெலேவத்த வீதி | 392,980 | 2015.11.18 | 241,429 | அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை |

(இ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல் முன்னேற்றமடைந்திராத செயற்திட்டங்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

பினவரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). மெதகம பிரதேச செயலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட கலுகஹவாடிய மற்றும் பக்கினிகஹவெல பட்டஸ்கலவத்தை குழாய் நீர்த் திட்டங்கள் இரண்டினதும் புலனாய்வுக் கட்டணம் மற்றும் குழி தோண்டும் கட்டணமாக ரூபா 1,501,770 மொனராகலை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், 2015 பெப்ரவரி 29 ஆந் திகதியளவிலும் இரண்டு குழாய் கிணறுகளின் நிர்மாண வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii). வெல்லவாய பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் உள்ள தெமட்டத்த ஆர குறுக்குப் பாதையில் வசிப்பவர்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் 58 பேருக்கு நீர் மானிகளை வழங்குவதற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நீர்வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபைக்கு ரூபா 148,867 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதியளவிலும் 18 நலன்பெறுநர்களுக்கு நீர்மாணிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii). தனமல்வில பிரதேச செயலகத்திற்கு உட்டபட்ட பிரதேசத்தில் 2014 ஆம் ஆணடில் பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் போதாகம பிரிவில் உள்ள 14 குரும்பங்களுக்கு நீர் மானிகளை வழங்குவதற்கென நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபைக்கு 2014 திசெம்பர் 18 ஆந் திகதியன்று ரூபா 350,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதியளவிலும் செயற்திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(iv). மொனராகலை பிரதேச செயலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஜாதிக சவிய கம நெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கவுடாவ மஹவெல அணைக்கட்டு மற்றும் குளத்தின் பாதையை புனரமைப்பதற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,375,231 வழங்கப்பட்டபோதும், 2015 மே 18 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிராத வேலைகளுக்கும் ரூபா 1,178,178 கொடுப்பனவு செய்யப்பட்ருந்தது.

## 3.8 சர்ச்கைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2015 ஆகஸ்ட் 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் பிரகாரம் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாவட்டச் செயலக சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக 2015 பெப்ரவரி முதல் திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் மாதாந்தம் ரூபா 41,000 வீதப்படி வெளி நபர் ஒருவருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கமைய பாதுகாப்பு பிணையாக 03 மாத வாடகையான ரூபா 123,000 வைப்பிலிடப்படவில்லை. மே மாதம் வரை சிற்றுண்டிச்சாலையின் வாடகையான ரூபா 102,500 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மெதகம திவிநெகும அலுவலகத்தால் 2015 ஆம் அண்டில் திவிநெகும சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசின் 90 சதவீத பங்களிப்பு மற்றம் 40 சதவீதமாக இருக்கும் வண்ணம் 30 பிரிவுகளில் உள்ள நலன் பெறுநர்களுக்கு ரூபா 1,434,125 வழங்கப்பட்டு நாற்றுப் பண்ணை ஒன்றின் மூலம் 50,000 மிளகுச் செடிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மொனராகலை ஏற்றுமதிக் விவசாயத் திணைக்களத்தின் மிளகுச் செடி ஒன்றினது உத்தரவாத விலை ரூபா 23 ஆகும். எனினும், ரூபா 35 வீதம் தனிநபர் நிறுவனம் ஒன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 600,000 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மடுல்ல பிரதேச செயலகத்தால் 2015 ஆம் ஆண்டில் 90 சதவீதம் மற்றும் 40 சதவீதம் என அரசாங்கப் பங்களிப்புடன் சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு மடுல்ல பிரதேச செயலகத்தின் திவிநெகும கிளை நலன்பெறுநர்களுக்கு வழங்குவதற்கென ஒரு மிளகுச்செடி ரூபா 30 வீதம் 10,150 செடிகளுக்கு ரூபா 257,250 வழங்கி தனியார் வழங்குனர் ஒருவருக்குக் கொடுப்பனவு செய்திருந்தது. அவ்வழங்குனர் 2016 பெப்ரவரி 17 ஆந் திகதியளவிலும் மிளகுச் செடிகளை வழங்கியிருக்கவில்லை.

(உ) மொனராகலை பிரதேச செயலகத்தால் 2015 திவிநெகும சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நலன்பெறுநர்களுக்கு வழங்குவதற்காக ஒவ்வொன்றும் ரூபா 13,200 வீதம் ஆயிரம் லீட்டர் ஹைபிறிட் நீர்த்தாங்கிகள் பதினைந்தை ரூபா 475,000 பெறுமதியில் தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து கொள்வனவு செய்வதற்கென கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. களப் பரிசோதனையின் பிரகாரம் நலன்பெறுநர்களுக்கு ஹைபிறிட் நீர்த் தாங்கிகளுக்குப் பதிலாக Antonmax நீர்த் தாங்கிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றனவாக இருந்தன. அவ்வாறாக அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

(அ) மடுல்ல பிரதேச செயலகம் 2015 ஆம் ஆண்டில் 9 நாட்களின் போது ரூபா 3,269,280 பெறுமதியான கொள்வனவுகளுக்கு கொள்வனவுக் குழு எனும் ரீதியில் ஒன்றுகூடித் தீர்மானங்களை மேற்கொண்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டபோதும், வருகை பதிவேடு மற்றும் நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் கொள்வனவுக் குழுவின் அங்கத்தவர்கள் அந் நாட்களில் அலுவலகத்தில் இல்லாது வெளிக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியேற்பாட்டுடன் புத்தல மற்றும் வெல்லவாய பிரதேச செயலகப் பிரிவுகளில் குடி நீர்க் குழாய்களை விஸ்தரிக்கும் செயற்திட்டத்திற்கென நீர்க் குழாய்கள் மற்றும் துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கு 05 சந்தர்ப்பங்களில் தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 20,980,250 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இக் கொள்வனவு சம்பந்தமாக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், தேசிய

போட்டியுடனான கூறு விலைகள் கோரப்பட்டிராததுடன், மட்டுப்படுத்தப்பட்ட கூறு விலைகளைக் கோருவதன் மூலம் வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

(இ) மொனரகால மாவட்டச் செயலகத்தில் 350*KVA* மின் உற்பத்தி இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்து பொருத்துவதற்கு 2014, 2015 ஆம் ஆண்டுகளில் தனியார் கம்பனி ஒன்றிற்கு 3 சந்தர்ப்பங்களில் ரூபா 9,595,924 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அக்கொள்வனவுக்கு அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் தேசிய போட்டியுடனான கூறுவிலைகள் கோரப்படாததுடன், வரையறுக்கப்பட்ட கூறுவிலைகளைக் கோருவதன் மூலம் வழங்குநர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

**3.10 இழப்புகளும் நட்டங்களும்**

2015 ஒக்டோபர் 22 ஆந் திகதியளவில் வெல்லவாய பிரதேச செயலகத்திற்குரிய நீர் பவுசர் ஒன்றினது வின்ட்ஸ்கிரீன் உடைந்து போனமை சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின் படி பரீசீலனை மேற்கொள்ளப்பட்டிராததுடன், அது அலுவலக வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

**3.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2014 ஆம் ஆண்டில் ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மெதகம பிரதேசச் செயலகப் பிரிவில் மியனகந்துர கல்ஹிதமுல்ல நீர்த்திட்டத்திற்கென ரூபா 994,073 செலவழித்து, பொது உரித்தை உறுதி செய்யாது, தனியார் காணி ஒன்றில் தாங்கி நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

**3.12 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

மாவட்டச் செயலகம் தொடர்பாகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் சம்பந்தமாக மாவட்டச் செயலகத்தால் சீராக்கப்படாத செய்யப்பட்டிராத பந்திகளுடான தொடர்பு வருமாறு

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு**

| ஆண்டு | பந்தி இலக்கம் | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| 2006 | 8.7.2 (அ)(i) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.9.1 மற்றும் 3.9.2 ஆம் வழிகாட்டல்களைப் பின்பற்றாமல் தனமல்வில பிரதேச செயலகத்தால் ரூபா 1,950,000 செலவழிக்கப்பட்டு 26 விற்பனைக் கூடங்களை நிர்மாணிக்கும் போது உப ஒப்பந்தம் வழங்கப்பட்டமை தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர்/ பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2008 | 10.4(ஊ)(i) | 2006/2007 ஆம் ஆண்டுகளில் கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் போபிட்டிய, கெனகல்லந்த வெஹெரகல, கஹம்பான ஆகிய ஜனசபா அலுவலகங்களை நிர்மாணிக்கையில் ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் தவறுகள் சம்பந்தமாக விசாரணை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2010 | 4.7 (i) | 2002 ஆம் ஆண்டில் வெல்லவாய பிரதேச செயலகத்தின் கெப் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகி ரூபா 375,000 இழப்பு ஏற்பட்டிருந்தது. அவ் இழப்பில் ரூபா 362,500 குறித்த நபர்களிடமிருந்து 2016 ஜூலை 31 ஆந் திகதியளவிலும் அறவிடப்படாதிருந்தது. |

**3.13 முகாமைத்துவ நலிவுகள்**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சியம்பலான்டுவ மற்றும் எத்திமலே குடியேற்றத் திட்டங்களது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 16 நீண்டகால காணி அனுமதிப்பத்திரங்களை உடையோருக்கிடையே வணிக விடயங்களுக்கென நீண்டகாலக் குத்தகையாக வழங்கப்பட்டிருந்த காணிகளில் 2016 பெப்ரவரி 29 ஆந் திகதியளவில் வரி நிலுவையாகிய ரூபா 8,746,969 அறவிடப்படாதிருந்தது.

(ஆ) முத்துக்கண்டிய குடியேற்றத் திட்டத்தின் 36 குத்தகையாளருக்கு 2003 ஆம் ஆண்டில் ஏல அடிப்படையில் வருடாந்தம் ரூபா 800 குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகள் தொடர்பாக 2016 பெப்ரவரி 29 ஆந் திகதியளவில் ரூபா 200,000 அறவிடப்படாதிருந்ததுடன், அக் குத்தகையாளருக்கு நீண்டகாலக் குத்தகையைத் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சியம்பலாண்டுவ மற்றும் மொனராகலை திவிநெகும அலுவலகங்களால் 2014 ஆம் ஆண்டில் திவிநெகும சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 72 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள 763 நலன்பெறுநர்களுக்கு ரூபா 12,871,352 அரசாங்கப் பங்களிப்பாக வழங்கப்பட்டு சுயதொழில்களை ஆரம்பிப்பதற்கான மானியம் வழங்கும் நடவடிக்கையின் போது திவிநெகும உத்தியோகத்தர்களுக்கு ரூபா 453,995 பயணச் செலவினமாகவும் சீவனப் படியாகவும் வழங்கப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தர்கள் அது தொடர்பாகத் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டதை உறுதி செய்வதற்கான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மொனராகலை பிரதேச செயலகத்தின் 04 ஆம் இலக்க நிர்வாக உத்தியோகத்தருக்குரிய நிரலிடப்பட்ட மனை ஒன்றை 2003 ஆம் ஆண்டு தொடக்கம் பிரதி அமைச்சர் ஒருவரது ஒருங்கிணைப்பு அலவலகத்தை நடாத்துவதற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2016 ஜுலை 31 ஆந் திகதியளவிலும் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த உத்தியோகபூர்வ மனையின் 2016 மார்ச் 04 இல் உள்ளவாறான கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நீர்க்கட்டணப் பட்டியல் ரூபா 214,806 ஆகும்.

**3.14 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 44 | 35 | 09 | - |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 23 | 02 | 21 | - |
| (iii) | இரண்டாந் நிலை மட்டம் | 792 | 682 | 110 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 107 | 96 | 18 | 7 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 02 | - | 02 | - |
| | மொத்தம் | 968 | 815 | 160 | 07 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செவனகல பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் பதவி 12 ஆண்டுகளாக வெற்றிடமாக உள்ளது

(ஆ) வெல்லவாய பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் பதவி 01 ஆண்டாகவும், 1 நிர்வாக உத்தியோகத்தர் பதவி 12 ஆண்டுகளாகவும், நிர்வாக கிராம உத்தியோகத்தர் பதவி 06 ஆண்டுகளாகவும், தகவல் ஊடகத் தொழில்நுட்ப பதவியாளர் பதவி 07 ஆண்டுகளாகவும் வெற்றிடமாக உள்ளன.